புலமைத் தேடல்

நுண்ணறிவு வினாக்கள்

02

பகுதி -I வினாக்களை அடிப்படையாகக் கொண்டது

தொடர் இல - 02 மாணவர் பெயர்.....

புலமை ஆசிரியர் : திரு.செ. நிஷாந்தன் வடமராட்சி யாழ்ப்பாணம் **நேரம் : 20 நிமிடம்**


1) இடத்தினை ஒழுங்குபடுத்திக் காட்டும் விடை யாது?
   1) கிராமம், மாவட்டம், இலங்கை, மாகாணம்
   2) இலங்கை, மாகாணம், மாவட்டம், கிராமம்
   3) மாகாணம், மாவட்டம், கிராமம், இலங்கை.

2) ஒருவர் தனது வருமானத்தின் அரைவாசியை கல்விச் செலவிற்காகவும் மிகுதியில் அரைவாசியை உணவிற்காகவும் எஞ்சியதை வங்கியில் 2500 ரூபாவை சேமித்தான் எனின் கல்விக்காக செலவு செய்த பணம் எவ்வளவு?
   1) ரூபாய் 2500 2) ரூபாய் 5000 3) ரூபாய் 10000

3) ஒரு போத்தலில் 20 சிவப்பு நிற மாபிள்களும் 15 வெள்ளை நிற மாபிள்களும் சில நீல நிறமாபிள்களும் இருந்தன. அங்கிருந்த நீலநிறமாபிள்கள் வெள்ளை நிற மாபிள்களை விட கூடவாகும். ஆனால் சிவப்பு நிற மாபிள்களை குறைவாகும் எனின் போத்தலில் இருந்த நீலநிற மாபிள்கள் எத்தனை?
   1) 21 2) 14 3) 16

4) ஒருவர் கதைப்புத்தகத்தின் 47 ம் பக்கத்தில் இருந்து 95 ஆம் பக்கம் வரை வாசித்தான் எனின் அவன் வாசித்த பக்கங்கள் எத்தனை?
   1) 48 2) 49 3) 50

5) நாற்பத்தையாயிரத்து முந்நூற்று நாற்பத்தாறு என்னும் எண்ணிலுள்ள இலக்கங்களை பின்னால் இருந்து முன்னால் எழுதும் போது கிடைக்கும் எண் யாது?
   1) அறுபத்து நான்காயிரத்து முந்நூற்று ஐம்பத்தாறு.
   2) அறுபத்து நாற்காயிரத்து நூற்று பதின்நான்கு.
   3) அறுபத்து நான்காயிரத்து முந்நூற்று ஐம்பத்து நான்கு.

6) 

இதில் சிறிய முககோணியின் சுற்றளவு 9 cm எனின் பெரிய முக்கோணியின் சுற்றளவு யாது?

   1) 24 cm 2) 18cm 3) 16cm

7) பேருந்தில் எப்போதும் இருப்பது யாது?
   1) சாரதி 2) நடத்துனர் 3) இருக்கை

www.ikedu.lk

8) 6 மாடு 6 சாக்குப் புல்லை ஆறு நாட்களில் சாப்பிடும் எனின் ஒரு மாடு 6 சாக்குப்புல்லை எத்தனை நாட்களில் சாப்பிடும்?

1) 21 2) 36 3) 6

9) 2019 ம் ஆண்டு தை மாதம் 1ம் திகதி புதன் கிழமையாகும் எனின் 2020 ம் ஆண்டின் இறுதி நாள் என்ன நாளாகும்?

1) புதன் 2) வியாழன் 3) வெள்ளி

10) ஒரு காணியில் $\frac{3}{6}$ இற்கு மிளகாயும் $\frac{1}{3}$ பகுதியில் வெண்டிச் செடியும் நடப்பட்டன எனின் மொத்தக் காணியில் எவ்வளவு பகுதியில் பயிர்கள் நடப்பட்டன.

1) $\frac{3}{6}$ 2) $\frac{5}{6}$ 3) $\frac{4}{6}$

11) பாடசாலை தோட்டத்தில் $\frac{3}{7}$ பகுதியில் மரக்கறிகளும் $\frac{1}{7}$ பகுதியில் தானியப் பயிர்களும் பயிரிடப்பட்டன எனின் மொத்தக் காணியில் எவ்வளவு பகுதியில் பயிர்கள் நடப்பட்டன?

1) $\frac{5}{7}$ 2) $\frac{3}{7}$ 3) $\frac{4}{7}$

12) வெற்றிடத்தில் வரவேண்டிய சொல்லைத் தெரிவு செய்க.

வடக்கு → வடமேற்கு → மேற்கு → தென் மேற்கு, தெற்கு ----------

1) வட கிழக்கு 2) தென் கிழக்கு 3) கிழக்கு

13) வெற்றிடத்தில் வர வேண்டிய சொல்லை தெரிவு செய்க.

எழுத்து → சொல் → ---------- → பந்தி

1) கட்டுரை 2) பாடல் 3) வசனம்

14) மாணவன் A என்ற இடத்திலிருந்து வடக்கு நோக்கி 50 m பயணித்து அதிலிருந்து இடது பக்கமாக திரும்பி 100 m பயணம் செய்தார். மீண்டும் அவர் இடப்பக்கம் திரும்பி 100 m பயணம் செய்து அதிலிருந்து மீண்டும் இடது பக்கம் திரும்பி 50m பயணம் செய்து B என்ற இடத்தை அடைகிறார். அவர் பயணத்தை ஆரம்பித்த A என்ற இடம் தற்போது அவருக்கு தெரிவது எந்த திசையாகும்?

1) மேற்கு 2) வடகிழக்கு 3) தென் மேற்கு

15) A,B,C,D என்போர் ஒரே குடும்பத்தை சேர்ந்த கணவன் மனைவியாகவும் அவர்களுடைய பிள்ளைகள் சகோதரன் - சகோதரி இருவரும் ஆவார்கள். அவர்களுள் இருவர் பெண்களாவார். A யினது தாய் B ஆவார் D யினது மகன் C ஆவார். இதற்கேற்ப A என்பவர் C இற்கு என்ன உறவுமுறையாகும்?

1) சகோதரி 2) தாய் 3) தந்தை

www.ikedu.lk